பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 25 வியாழக்கிழமை 09.01.2025 கதிர் 063

### இது ரகசியம் அல்ல!

தற்போதைய ஆளும் தரப்பு தேசிய மக்கள் சக்தி என்று தெரிவிக்கப்பட்டாலும் அதன் முதுகெலும்பு ஜேவிபிதான். அந்தக் கட்சியுடன் பல ☞ 2

# சர்வதேச போர்க்குற்ற விசாரணை; அமெரிக்கா அழுத்தம் தரவேண்டும்

## தூதுவரிடம் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

ஈழத் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் வகையில், இலங்கைக்குஎதிரானஜெனீவாத்தீர்மானத்தை நிறைவேற்ற அமெரிக்கா அழுத்தம் வழங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரன்அமெரிக்கத்தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும்,இலங்கைக்கானஅமெரிக்கத் தூதுவர்ஜூலிசங்அவர்களுக்கும்இடையிலான சந்திப்பு இன்று மாலை கொழும்பில் நடைபெற்றது. அப்போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழர்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கான சாத்தியமின்மைகள் எழும்போது அதுசார்ந்த அரசியல் நகர்வுகளின் தேவைப்பாடு மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. ☞ 2

## வினாத்தாள் கசிவால் ஆசிரியர் பணி நீக்கம்

வடமத்திய மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளின் தரம் 6 மற்றும் 7 பரீட்சையின் வினாத்தாள் கசிந்தமைக்கு காரணமான ஆசிரியர் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என வடமத்திய மாகாணக் கல்வி செயலாளர் தெரிவித்துள்ளார்.

வட மத்திய மாகாணத்தில் ஜனவரி 6 நடக்க இருந்த தரம் 11 தவணைப் பரீட்சையின் சிங்கள இலக்கிய வினாத்தாள் சமூக ஊடகங்களில் கசிந்ததால், அதிகாரிகள் உடனடி ☞ 2

## 'தூய ஸ்ரீ லங்கா' திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைக்குக

### பிரதமர் ஹரினி கோரிக்கை

புதிதாக சட்டமியற்றி க்ளீன் ஸ்ரீ லங்கா செயற்திட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கவில்லை. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதற்கு சமூக கட்டமைப்பில் இருந்து மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்குஒட்டுமொத்தமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாற்றத்தை நோக்கி பயணிக்கையில் எதிர்ப்புக்கள் தோற்றம் பெறுவது இயல்பானதே என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பிரதமர் நேற்று நாடாளுமன்றத்தின் கேள்வி நேரத்தில் ஆளும் தரப்பின் உறுப்பினர் அஸிதநிரோசன்முன்வைத்த கேள்விகளுக்குப்பதிலளிக்கையில் ☞ 8

## பயிர்ச் செய்கைப் பாதுகாப்புக்கு மட்டுமே துப்பாக்கிகள் அனுமதி

### ஆளும்தரப்பு அறிவிப்பு

பயிர்ச்செய்கைகளை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்காக மாத்திரம் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதி வழங்கப்படுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய தேவைகளுக்காக தற்போது துப்பாக்கிகளை வழங்கும் நடவடிக்கைமட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

பொலிஸ்மற்றும்முப்படைகளினால் தனிப்பட்ட பாதுகாப்புக்காக சிவில் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளை மீண்டும் பாதுகாப்பு அமைச்சுக்குகையளிப்பதற்குமீண்டும் ஜனவரி 20 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குப் பின்னர் துப்பாக்கிகளைக் கையளிக்காத நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

இதனிடையே சிவில் நபர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் தொடர்பான கணக்காய்வு ☞ 8

## பேருந்து அழகுபடுத்தலை நீக்கும் அவகாசம் 3 மாதங்களுக்கு நீடிப்பு

### போராட்ட முனைப்பை கைவிட்டது சங்கம்

பேருந்தை அழகுப்படுத்தும் வகையில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களை அகற்றுவதற்கான இரு வார கால அவகாசம் மூன்று மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. பயணிகளுக்கு அசௌரியங்களை ஏற்படுத்தும் வகையில் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள உதிரிபாகங்களை உடனடியாக நீக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பேருந்து உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபருடன் நேற்று இது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து தனியார் பேருந்து உரிமையாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்ட தீர்மானத்தை கைவிட்டனர்.

'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டத்தால் தாம் ☞ 2

## வடக்கு மாகாணத்தில் 5 தொழிற்பேட்டைகள்

### நிறுவ ஆளும் தரப்புத் திட்டம்

வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டை நிலையங்களை அமைப்பதற்காக காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தன்னை நேற்றுச் சந்தித்துப் பேசிய தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஜீவன் ஜெயசந்திர மூர்த்தி மற்றும் வைத்தியர் பவானந்தராஜா ஆகியோரிடமே ☞ 8

## யூத வழிபாட்டிடங்களுக்கு அனுமதி தரப்படவில்லை

### பிரதமர் அறிவிப்பு

யூதர்கள் இலங்கையில் தங்கள் வழிபாட்டு தலங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பௌத்தசாசன அமைச்சோ, அல்லது அதன் திணைக்களங்களோ இதற்கான அனுமதியை வழங்கவில்லை என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த வழிபாட்டு ☞ 8

### தைப் பொங்கலுக்குத் தேவையான

## அரிசி, தேங்காய் விலைகளை குறைக்க அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்தட்டும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அடுத்த வாரம் சீனாவுக்குச் சென்று அங்கு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடவுள்ளார் என்று குறிப்பிடப்படுகிறது. ☞ 8

## 3 லட்சம் தொன் அரிசியை கொள்முதல் செய்ய திட்டம்

### ஆளும் தரப்பு அறிவிப்பு

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து 5000 மெற்றிக்தொன் வரையிலான நெல்லை மாத்திரமே ஆளும்தரப்பு கொள்வனவு செய்துள்ளது. இம்முறை 45 இலட்சம் மெற்றிக்தொன் ☞ 8

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனம் ஜனாதிபதியால் பாதிப்பு

### குற்றஞ்சாட்டுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

வழக்குகளை துரிதப்படுத்துவது குறித்து சட்டமா அதிபர் மற்றும் அவரது திணைக்கள அதிகாரிகளுடன் ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஆலோசனை நடத்தியது அந்தத் திணைக்களத்தின் சுயாதீனத்தைப் பாதித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சி கண்டித்துள்ளது.

ஜனாதிபதிஆலோசனைவழங்குவதாயின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனம் கேள்விக்குள்ளாக்கப்படும். இவ்வாறான செயற்பாடுகளினால் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பின் எதிர்காலம் சந்தேகத்துக்குரியதாக மாறிவிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சிக்கு வந்தவுடன் சுகாதாரம் மற்றும் உணவு மீது விதிக்கப்பட்டுள்ள வற்வரியை நீக்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் தற்போது எவ்விதமான மாற்றமுமில்லாமல் வரி கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி உலகில் இல்லாத பொய்யை சொன்னது. அதனால் உலகில் இல்லாத வகையில் வெற்றிப் பெற்றது. அதனால் தான் இந்த ஆளும்தரப்பை பொய் ஆட்சி என்று குறிப்பிடுகிறோம்.

பொருளாதார நெருக்கடிக்கு 75 ☞ 8

## பிரதான அரிசி உற்பத்தியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 40 லட்சம் லாபம்

### ஆனால் விவசாயிகள், நுகர்வோருக்கு பயனில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் சாடல்

பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் நாளொன்றுக்கு 40 இலட்சம் ரூபா இலாபமடைகிறார்கள். இந்த இலாபத்தின் குறைந்தப்பட்ச பயன்கூட விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் கிடைப்பதில்லை. அரிசிமாபியாக்களை இல்லாதொழிப்பதை மறந்து விட்டு வாகனங்களின் உதிரிபாகங்களை இறக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. 'தூய ஸ்ரீலங்கா' திட்டம் என்று குறிப்பிட்டுக்கொண்டு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொழிற்சங்கங்களும் அமைப்புக்களும் சேர்ந்துகொண்டுதான் தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக்கட்டமைத்துள்ளன. தேர்தல்களில் வெற்றிபெறும் வரை தேனிலவாகத் தொடர்ந்த இந்த உறவு இப்போது கசக்கத் தொடங்கிவிட்டது என்று தெரிகிறது.

மகிந்த மற்றும் கோட்டா ஆட்சிக் காலப்பகுதியில் இடம்பெற்றது போன்று இந்தக் கசப்புணர்வு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு எதிராக ஜேவிபியிடமிருந்து கிளம்பத் தொடங்கியிருக்கின்றது. அதாவது தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு எதிராக ஜேவிபிக்குள் இருந்து போராட்டம் தொடங்கியுள்ளது. மகிந்த - கோட்டா ஆட்சியில் அவர்களுக்கு எதிர்பக்கத்தில் விமல்வீரவன்ஸ மற்றும் கம்பன்பில ஆகியோர் இருந்தனர். இன்று அவர்களுக்குப் பதிலாக விமலின் முகாமை பிரதிநிதித்துவப்படுத்திய ஹந்துன்நெத்தி இந்தப் போராட்டத்தைக் கையிலெடுத்துள்ளார். ஹந்துன்நெத்தியின் தாக்குதல் மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளரையும் இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்றது.

ரணில்-ராஜபக்சஆட்சியில்நியமிக்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநரையும் நிதி அமைச்சின் செயலாளரையும் அநுர தனது ஆட்சியிலும் தக்கவைத்துக்கொண்டார். ஆனால், இவர்களுக்கு எதிராக ரணில் ஆட்சிக் காலத்திலேயே குற்றச்சாட்டுக்கள் இருந்தன. அதிலும் நிதியமைச்சின் செயலாளர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்க நிதி அமைச்சின் செயலாளர் மறுத்தார் என்பது அதில் மிக முக்கியமானது. இப்போது மலிமா (திசைகாட்டி) ஆளும் தரப்புக்குள் இருந்தே எதிர்ப்புக்கிளம்பியுள்ளதை ஹந்துன்நெத்தியின் கூற்றிலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது. எனினும், அந்தத் தாக்குதலின் விளைவு என்னவாக இருக்கும் என்பதை இப்போது கணிக்க முடியாது.

அநுர ஜனாதிபதியாக பதவியேற்ற நாளிலிருந்து திசைகாட்டிக்கும் ஜேவிபிக்கும் இடையில் ஒரு முரண்பாடு நீடிக்கின்றது. தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுத்தேர்தலில் போட்டியிடுபவர்களை புறக்கணிக்க ஜேவிபி திட்டமிட்டதிலிருந்து இந்த முரண் நீடிக்கின்றது. இந்த மோதலின் காரணமாகவே தேசிய மக்கள் சக்தி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட, நாடு முழுவதும் நன்கு அறியப்பட்ட இரண்டு பிரமுகர்களான விமல் கட்டிபேராச்சி மற்றும் விரை பல்தசார் ஆகியோரும் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி உ-புல் குமாரபெருமவும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜேவிபியால் தோற்கடிக்கப்பட்டு யாரென்றே தெரியாத வேட்பாளர்கள் வெற்றிபெற வைக்கப்பட்டார்கள்.

இந்த நிலையில் ஹந்துன்நெத்தியின் ஊடாக வெளிவந்துள்ள இந்தத் தாக்குதல் திசைகாட்டிக்கும் ஜேவிபிக்கும் இடையிலான மோதலின் நீட்சி என்றே பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக ஜேவிபியின் கொள்கைப் பக்கமாக ஆளும்தரப்பை முழுமையாகத் திருப்பும் நம்பிக்கையுடன் ஹந்துன்நெத்தி இந்த அரசியல் குண்டை வீசியிருக்கிறார் என்று பலரும் நம்புகின்றனர்.

இதுமட்டுமல்ல, கடந்த வாரம் திசைகாட்டியின் வலுவான செயற்பாட்டாளரான கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறியும் தனது முகநூல் பக்கத்தில் திசைகாட்டி ஆளும்தரப்பு மீது இரண்டு கடுமையான விமர்சனங்களைப் பதிவு செய்திருந்தார். நிர்மல் தேவசிறி, திசைகாட்டியை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு பல்கலைக்கழக அமைப்பினுள் பெரும் கருத்தியல் போராட்டத்தை முன்னெடுத்த புகழ்பெற்ற பேராசிரியர். முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் முனைவர் பட்டம் குறித்து முதலில் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர். சபாநாயகரின் பிரச்சினை தொடர்பில் பிரச்சினை இருப்பின் அதனை உடனடியாக சரிசெய்வதற்கு அசோக ரன்வல நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இல்லையெனில் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள் தள்ளாமல் அந்த பதவியில் இருந்து விலகவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். நிர்மலின் விமர்சனத்தைத் தொடர்ந்தே எதிர்க்கட்சியில் இருந்த மற்ற குழுக்கள் அசோக ரன்வாலா மீது போரை அறிவித்தன.

அது நிர்மல் இப்போது, அரசியல் நெருக்கடியில் திசைகாட்டி மௌனம் சாதிப்பதைக்கடுமையாகக்கேள்விக்குள்ளாக்கி, இரண்டு சிறப்புக் குறிப்புகளை தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அதில் ஒன்று, 'தேசிய மக்கள் சக்தியின் அறிவுசார் வட்டம் அரசியலைக் கைவிட்டதாகத் தெரிகிறது'. இரண்டாவதாக, 'அதிகாரத்துவத்தை முறியடித்து அரசைக் கைப்பற்றுவதன் மூலம் மட்டுமே சமூக மாற்றத்தை யதார்த்தமாக்க முடியும்'. அதன்படி, நிர்மல் விட்டுச்சென்ற இரண்டாவது குறிப்பும் சுனில் ஹந்துன்நெத்தியின் கூற்றுக்கு மிகவும் ஒத்திருப்பதைக் காணலாம். மேலும், நிர்மலின் இந்த அறிக்கையின் மூலம், திசைகாட்டிக்குள் சில நெருக்கடிகள் உருவாகியிருப்பதும் தெரிகிறது.

குறிப்பாக ரணில் ஆட்சிக் காலத்தின் அரசு அதிகாரிகளை மாற்றி ஜேவிபிக்கு ஆதரவான அதிகார வர்க்கம் ஒன்றை தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள் உருவாக்கத் தவறியிருக்கிறார்கள் என்பதிலேயே இந்த மோதல் ஏற்பட்டிருப்பதை உணர முடிகின்றது. இதனை அடுத்தே அரச உயரதிகாரிகளை மாற்றவும் ஆளுநர்களை மாற்றவும் ஆளும்தரப்பு இப்போது முனைப்புக்காட்டுகின்றது என்றும் கூறப்படுகின்றது. இதன் முதற்கட்டமாக மூத்த பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. தொடரப் போகும் இந்த நடவடிக்கை ஜேவிபியை குளிர்விக்குமா அல்லது ஆளும் தரப்பின் முக்கிய கொள்கை முடிவுகளில் எல்லாம் இதுபோன்றே தொடர்ந்து பெரும் செல்வாக்கைச் செலுத்துமா என்பதே ஆழ்ந்து நோக்கப்படவேண்டியது. ஏனெனில் இனப் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு முயற்சிகள், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றில் இதன் தாக்கத்தால் தமிழர்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு..

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது தமிழ் அரசுக் கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

## வினாத்தாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை மேற்கொண்டனர். பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி, மாகாணத்தில் உள்ள 600க்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கான வினாத்தாள்கள் விநியோகம் நிறுத்தப்பட்டது. பரீட்சை வினாத்தாளை கசிய விட்டவர் என்று குற்றத்திற்காகவே ஆசிரியர் ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## பேருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசௌகியங்களுக்கு உள்ளாகுவதால் இவ்வாரம் முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக தனியார் பேரூந்து உரிமையாளர்சங்கத்தினர் அறிவித்திருந்தனர். பொலிஸாரின் செயற்பாடுகளினால் தாம் நெருக்கடிக்குள்ளாகுவதாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், பதில் பொலிஸ்மா அதிபருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

## பிரதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் மோசடிகளும், குற்றங்களும் மறைக்கப்படுகிறது. முறைமை மாற்றத்தில் மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் முறைமை மாற்றம் பிரதான பேசுபொருளாகக் காணப்பட்டது.

அனைத்துஅரசியல்கட்சிகளும்முறைமை மாற்றம் பற்றி பேசின. சிறந்த மாற்றத்தை தேசிய மக்கள் சக்திளால் ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை கொண்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பைத் தோற்றுவித்தார்கள்.

வாழ்க்கைச் செலவு குறைப்பு, நாணய நிதியத்துடனான செயற்திட்ட மறுசீரமைப்பு, ஊழல் மோசடி, சிறந்த அரச நிர்வாகம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்குவந்த 100நாட்கள்நிறைவடைந்துள்ள நிலையில் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா என்பதை ஆராய வேண்டும்.

2015ஆம்ஆண்டுநல்லாட்சிஆளும்தரப்பு 100 நாள் வேலைத்திட்டத்தை மக்கள் மத்தியில் முன்னெடுத்தது. எரிபொருள், பருப்பு, அரிசி, உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பகுதியளவில் குறைக்கப்பட்டன.

மக்களின் வாழ்க்கைச் செலவுகளும் குறைக்கப்பட்டன. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் 100 நாள் நிர்வாகத்தில் அரிசி, தேங்காய், ஆகிய உணவுப் பொருட்களின் விலைகள் அமெரிக்கடொலருக்குநிகரானதாகக் காணப்படுகின்றன.

எதிர்க்கட்சிப் பதவிக்கான பொறுப்பை நாங்கள் சிறந்த முறையில் நிறைவேற்றியுள்ளோம். கோட்டபய ராஜபக்சவின் ஆளும்தரப்பில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படும்போது நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து பல முறை எடுத்துரைத்தோம்.

வங்குரோத்து நிலைமையை தடுக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு வலியுறுத்தினோம். இருப்பினும் ஆளும்தரப்பு எமது கருத்துக்கு மதிப்பளிக்கவில்லை. இறுதியில் நாடு வங்குரோத்துநிலையடைந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால ஆட்சியில் சர்வதேசநாணயநிதியத்துடனானசெயற்திட்டம் குறித்துபலயோசனைகளைமுன்வைத்தோம். எமதுகருத்துக்குமதிப்பளிக்காமல்ஆளும்தரப்பு யோசனைகளை ஏற்றது. அதனால் இன்று நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆகவே எதிர்க்கட்சிக்கான பதவியை நாங்கள் முறையாக செயற்படுத்தி ஆளும்தரப்பின் தவறை சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதித் தேர்தலின் போது அரிசி மாபியாக்களைமுடிவுக்கு கொண்டுவருவதாக குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் முடிவடைந்துள்ளபோதும் மாபியாக்களை முடிவுக்குகொண்டுவரவில்லை. குறைந்தபட்சம்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தொழிற் சங்கத்தினர் போராட்டம்

இரத்மலானையில் உள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதான அலுவலகத்துக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருமானஉதவிசார்நிலைதொழிற்சங்கத்தினர் போராட்டம் நடத்தினர்.

குடிதண்ணீர்கட்டணத்துக்கானபட்டியலை மீண்டும் வழங்க வேண்டும், சீருடைக் கெடுப்பனசை உயர்த்தி வழங்கவேண்டும், உள்ளக பதவி உயர்வுகளை விரைவுபடுத்த வேண்டும், விடுமுறை விடுப்புக்கான நிபந்தனைகளை விதிப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும்போன்றபலகோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தப்பட்டது.

# பெண்ணைத் தாக்கிய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து

## தமிழ் அரசுக் கட்சி எம்.பிக்கள் அழுத்தம்

பெரியநீலாவணைபொலிஸ்நிலையத்துக்கு முறைப்பாடளிக்கசென்றபெண்பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டமைக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய தமிழ் அரசுக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள்இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சபையில் வலியுறுத்தினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவுமற்றும்தீர்ப்பனவுமுறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் உள்ளிட்ட பல ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

அம்பாறைக்கும் மட்டக்களப்புக்கும் இடைப்பட்ட பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ய சென்ற பெண்ணொருவர்அங்கிருந்தஅறையொன்றில் பூட்டப்பட்டு பெண்ணென்றும் பாராது படுமோசமாக தாக்கப்பட்டுள்ளார்.

அவரின் உடலில் எல்லா பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நாங்கள் 'தூய ஸ்ரீ லங்கா' பற்றி பேசிக் கொண்டிருக்கையில் எங்கேயோ அதனை அசுத்தப்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெண்ணுக்கு மரியாதை கொடுக்கும் நாடாகவே இலங்கையைப் பார்க்கின்றோம். ஆனால் தெருவில் செல்லும்போது அந்தப் பெண்ணை ஒருவர் சேட்டையாக சைகை மூலம் துன்புறுத்திய காரணத்தால் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையம் சென்றபோதே அந்தப் பெண் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

தற்போதுஅந்தப்பெண்வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுகின்றார். இதில் சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

இந்த விடயத்தை சுட்டிக்காட்டி உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்ததாவது:

கல்முனை பெரியநீலாவணையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இந்தப் பெண்ணை தனிப்பட்ட முறையில் பொலிஸ் அதிகாரிகள் தகாத முறையில் பேசியதுடன் பொலிஸ் நிலையத்தை மூடி விட்டு அவரை துன்புறுத்தி கொடூரமாகத் தாக்கி வன்புணர்வுக்கு உள்ளாக்குகின்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டுளார்கள். அந்தப் பெண்ணின் மார்பகம், பின்புறம் என பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியுள்ளனர்.

சினிமாவில்தான் நாம் இவ்வாறான செயற்பாடுகளைப் பார்த்துள்ளோம். பொலிஸாரின் இந்தக் கேவலமான செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதில் தொடர்புபட்ட பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கு, எழுந்து பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, நடந்த சம்பவம் தொடர்பிலான விவரங்களை எனக்குத் தாருங்கள். நான் நாளை (இன்று) விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது ஒழுக்க விசாரணைகள் நடத்தப்படும். தவறு நேர்ந்திருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நிச்சயம் நாம் அந்தப் பெண்ணுக்கு நியாயம் வழங்குவோம்.

எதிர்தரப்பினரை போன்று நீங்களும் அனைத்துக் கும் 'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டத்தை தொடர்புப்படுத்தி பேசாதீர்கள். சட்டத்துக்கு முரணாக பொலிஸார் செயற்பட்டிருந்தால் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு, கிழக்கு மாகாணசபை தேர்தல்களை நடத்தி தமிழ் மக்கள் மனதை ஜனாதிபதி வெல்லவேண்டும்

## இந்துமத பீடம் கோரிக்கை

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஒரு பயங்கரமான யுத்த சூழ்நிலையை முடிவுக்கு கொண்டுவரு முகமாகவும் சமாதான சூழலை ஏற்படுத்தும் அத்திபார முயற்சியாகவும் இலங்கை இந்திய உடன்படிக்கை மூலம் 13 ஆம் சட்டம் அமுல்படுத்தப்பட்டு மாகாண சபை முறைமை மாகணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் நல்லாட்சி அரசு காலத்தில் ஒரு சில காரணங்கள் காட்டி அந்த மாகாண சபை தேர்தல் குறித்த திகதியில் நடைபெறாமல் ஒத்திப்போடப்பட்டது. இந்த நிலையில் மாகாண சபை தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற அச்சமான உணர்வு குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் மனதில் எழுந்தது.

இந்த வகையில் இப்போதைய அனுர அரசு மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்த மாகாண சபை ஆளுநர் அனைவரும் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு முழு அதிகாரம் கொண்டவர்களாக மாகாண சபையை கொண்டு நடத்துகின்றார்கள்.

எனவே மாகாண சபை குறித்து யாரும் பிரிவினை கோஷம் என்று நினைப்பதற்கு இடம் இல்லை. இந்த வகையில் அனுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசானது மாகாண சபை தேர்தலை நடத்தி வாக்களித்த மக்களின் மனதை மட்டும் அல்ல ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் மனதை வென்று எடுக்கும் செயற்பாட்டில் மாகாண சபை தேர்தலை நடத்தி தேசிய நல்லுறவு மிக்க நாட்டை கட்டி எழுப்ப இந்த நடவடிக்கை நிச்சயமாக அமையும்.

எனவே மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

(றமீஸ்)

இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் நிருவாகத்தினருக்கும் கிழக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான விஷேட சந்திப்பொன்று ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி சாரா ஊழியர்களின் பதவி உயர்வு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கல்வி சாரா ஊழியர்களின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியதுமான விஷேட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் காரியாலத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகர



இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் பொதுச்செயலாளர் ஏ.கே.டபிள்யூ. விஜேசேகர, சங்கத்தின் உதவித் தலைவர் எஸ்ஐம். பௌசான் மற்றும் சங்கத்தின் உதவிச்செயலாளர் எம்.ஜே.எம். சஜீத் உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் சமய திணைக்களத்தினருடன் தஸ்ஸஜி தேரர் சிநேகபூர்வச் சந்திப்பு

(ஸாகிர்)

தர்ம சக்தி அமைப்பின் தலைவர் கலாநிதி மாதம்ப ஹம அஸ்ஸஜி தேரர் அவர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு சினேகபூர்வ விஜயமென்றை செவ்வாய்க்கிழமை மேற் கொண்டு திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இனங்களுக் கிடையிலான சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவது தொடர்பான பொறிமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் தர்மசக்தி அமைப்பும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் பல வேலைத் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் தர்ம சக்தி அமைப்பின் நிறைவேற்று செயலாளர் பாதிரியார் அநுர பெரேரா, உதவிச் செயலாளர் சிவஸ்ரீ சிவ தர்சக சர்மா குருக்கள், பொருளாளர் அஷ்ஷெய்க் ஏ.என்.எம். பிர்தௌஸ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ரிஸான் ஹுஸைன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்களான சுல்கிப் மௌலானா, அஸாம் லத்தீப் ஆகியோருடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட், வக்ப் நியாய சபை செயலாளர் (பதில்) எம்.எஸ்ஐம். ரோஸன், திணைக்கள சகவாழ்வு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எம். றிஸ்மி ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# கடவுச்சீட்டுகள் அலுவலகத்தை கிழக்கிலும் ஆரம்பிக்குக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

(சினீஸ் கான்)

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் ஒன்றை கிழக்கு மாகாணத்திலும் உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் சபையில் கோரிக்கைவிடுத்தார்.

கொழும்பு மற்றும் வடக்கு, தெற்கு, மத்திய மாகாணங்களில் கடவுச்சீட்டு அலுவலகம் காணப்படுவதாகவும் ஆனால், கிழக்கு மாகாணத்தில் அந்த அலுவலகம் கிடையாது என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகமொன்று இல்லாதமையால் அங்குள்ள மக்கள் இரண்டு மூன்று தினங்கள் கொழும்புக்கு அலைய வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அதிகளவு உல்லாசப்பிரயாணிகள் வருகைத் தரும் கிழக்கு மாகாணத்திற்கும் கடவுச்சீட்டு அலுவலகமொன்றை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

# லக்கி ஜயவர்தன காலமானார்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்தன 71 ஆவது வயதில் நேற்று (புதன்கிழமை) காலமானார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இவர் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சராக கடமையாற்றியுள்ளார்.

கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயவர்தன, 1988ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது மாகாண சபைத் தேர்தலுடன் தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவர் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்சியாளர்களின் நிலைப்பாடு என்ன?

பயங்கரவாதத் தடைச்சட்டம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. அந்தக் சட்டத்தை நீக்கவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் அழுத்தம் கொடுத்ததன் மூலம் அதனை மீண்டும் அரசியல் மேல்தட்டு விவாதத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டிய அவசியமில்லை, அதனை சரிவரப் பயன்படுத்தினாலேயே போதுமானது என்ற சாரப்படத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களால் சர்ச்சை எழுந்தது. ஏனெனில் ஆட்சிக்கு வரும் வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்பதே தேசிய மக்கள் சக்தியினதும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவினதும் தீர்க்கமான முடிவாக இருந்தது.

இந்தச் சர்ச்சையில், பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து ஆளும்தரப்பு இன்னும் தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து ஆளும்தரப்பு அப்போதைக்கு அமைதியாகிக் கொண்டது. ஆனால், இப்போது எதிர்க் கட்சித் தலைவர் இந்த விடயத்தை மீண்டும் கிளறிவிட்டுள்ளார்.

"எதிர்கட்சியில் இருக்கும்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்த்துவந்த இன்றைய ஆட்சியாளர்கள் அதனை நீக்குவதற்கு ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கமல் இருக்கின்றனர்'' என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இந்தச் சட்டத்தை நீக்குவதா அல்லது திருத்துவதா என்ற நிலைப்பாட்டை ஆளும் தரப்பு உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

"பயங்கரவாத தடைச்சட்டம் அப்போது நாட்டில் இருந்துவந்த பிரிவினைவாத பயங்கரவாதப் போரைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக ஏற்படுத்தப்பட்டதாகும். 3 தசாப்தகாலப் போர் முடிவுக்குவந்து 15 வருடங்களாகியுள்ளபோதும் இந்தப் பயங்கரவத தடைச்சட்டம் ஏன் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லப்படுகின்றது?

தற்போது இந்த சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்கருத்து கொண்டோர், அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுவோர், வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவோர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் ஆளும் தரப்பால் ஒடுக்கப்படுகின்றார்கள்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன? இந்த சட்டத்தை திருத்துவதற்கோ அல்லது வலுவற்றதாக்குவதற்கோ ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்குமா?அவ்வாறு என்றால் ஆளும்தரப்பு முன்வைக்கும் மாற்றுத்தீர்வு என்ன? அதுதொடர்பில் ஆளும்தரப்பு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன? சிவில் போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இந்தச் சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க முடியுமா?

இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் எத்தனைபேருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்ருக்கிறது. அவர்களில் எத்தனை பேர் குற்றவாளியாக்கப்பட்டிருக்கின்றனர் அதேபோன்று எத்தனைபேர் புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டிருக்கின்றனர். இந்த தடைச்சாட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களில் எத்தனைபேர் நீதிமன்றத்தால் விடுவித்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்? இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வது தொடர்பாக ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன? இந்த சட்டத்தின் கீழ் பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படுவதற்கும் வழக்கு விசாரணை முடியும் வரை அவர்களைத் தடுத்துவைப்பதற்கும் நீதிவான் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கு இருக்கும் இயலுமை தொடர்பிலும் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன? எதிர்காலத்தில் சர்வதேச சட்டத்துக்கமைய இந்தச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தியுள்ள வரையரைகள் என்ன? இந்தக் கேள்விகளுக்கு ஆளும்தரப்பிடம் இருந்து தெளிவான பதிலை எதிர்பார்க்கிறோம் என்றோம்" என்று எதிர்க் கட்சித் தலைவர் தனது உரையில் சரமாரியாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகம் என்கிற வகையில் அந்தச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்பதே தமிழர்களின் ஏகமனதான தீர்மானம். தமிழர்கள் மீது மிக மோசமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதற்கும் மனித உரிமை மீறல்களில் அரச படையினர் ஈடுபடுவதற்கும் இந்தச் சட்டம் பெருந்துணை இருந்திருக்கின்றது. எனவே அது முழுமையாக நீக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அந்த வகையில் எதிர்க் கட்சித் தலைவரின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த தமது நிலைப்பாட்டையும் ஆளும்தரப்பு தெளிவாக்கவேண்டும்.

# 13ஆம் திருத்தத்தை பிஜேபி கைவிடுமா?

உ-புல் யோசப் பெர்னான்டோ

1987இல் இந்திய- - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், தொடர்ச்சியாக இந்தியாவிற்குச் சென்ற இலங்கை அரசதலைவர்கள் எல்லோரும் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என இந்தியப் பிரதமர்களுக்குத் தொடர்ச்சியாக



உறுதியளித்தனர். இந்த உறுதிமொழிகள் இரு தரப்பினராலும் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கைகளில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு, உடன்படிக்கைக்கான தங்கள் உறுதிப்பாட்டை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி அநுரவின் முதல் இந்தியப் பயணத்தின்போது, அவர் இந்தியப் பிரதமருடன் கையொப்பமிட்ட கூட்டறிக்கையில் 13ஆவது திருத்தம் பற்றிய எந்தக் குறிப்பும் வெளிப்படையாகத் தவிர்க்கப்பட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13ஆவது திருத்தம் ஆகியவை இந்தியாவின் காங்கிரஸ் ஆளும்தரப்பின் முன்முயற்சிகள் என்றும், எனவே பாரதீய ஜனதா கட்சி (யமூணே) ஆளும்தரப்பிற்குக் கட்டுப்படாது என்றும் அநுரா இந்தியாவை வற்புறுத்தியதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், இந்தக் கூற்றின் துல்லியம் தெளிவாக இல்லை.

1988இல், இந்திய - -இலங்கை ஒப்பந்தத்தை வெளிப்படையாக விமர்சித்த ரணசிங்க பிரேமதாச இலங்கையின் ஜனாதிபதியானார். அதேநேரத்தில், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒரு தரப்பான ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் ஆளும்தரப்பு, 1989 இந்தியப் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. பிரேமதாச தனது ஜனாதிபதி தேர்தல் பரப்புரையில், இலங்கையின் வடக்கு கிழக்கில் இருந்து இந்திய அமைதி காக்கும் படையை (ஞுரஊேலுய்) திருப்பி அனுப்புவார் என்றும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு பதிலாக நட்புறவு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவார் எனவும் உறுதியளித்தார். இருப்பினும், இந்த வாக்குறுதிகள் ராஜீவ் காந்தி நிர்வாகத்திடம் நல்ல வரவேற்பைப் பெறவில்லை.

1989 தேர்தலில் காந்தி தோல்வியடைந்தபோது, பிரேமதாசா நிம்மதியை வெளிப்படுத்தினார். உடனடியாகத் தனது அயலுறவுத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவை இந்தியாவின் புதிய பிரதமரான வி.பி. சிங்கிடம் அனுப்பி வைத்தார். வி.பி.சிங் பிரதமரானதும் அவரிடம் சென்ற முதல் அயல்நாட்டு இராஜதந்திரியான விஜேரத்ன, இலங்கையின் வடகிழக்கில் இந்திய அமைதிப்படை செய்ததாகக் கூறப்பட்ட தவறான செயல்களை விவரிக்கும் ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களை எடுத்துச் சென்றார்.

பிரேமதாசாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த வி.பி.சிங், இறுதியில் இந்திய அமைதிப் படையைத் திரும்பப்பெற்றாலும், இந்திய இராணுவத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளால் அவர் அதிருப்தி அடைந்திருந்தார் என்று கூறப்படுகின்றது. இந்திய அமைதிப்படை காங்கிரஸ் ஆளும்தரப்பால் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தாலும் அது இந்திய தேசிய அமைப்பு என்பதால் அது இலங்கை அமைச்சரால் வெளிப்படையாகவே விமர்சிக்கப்பட்டதை வி.பி.சிங் விரும்பவில்லை அல்லது ரசிக்கவில்லை. இந்த விவகாரம் வி.பி.சிங்கின் நிர்வாகத்துடன் இலங்கை அரசு வலுவான உறவுகளைப் பேணுவதற்கான இயலுமைக்குத் தடையாகவே இருந்தது.

இந்திய- - இலங்கை ஒப்பந்தம் மற்றும் மாகாண சபைகள் முறை ஆகியவை பிரதமர் நரேந்திர மோடி அல்லது பிஜேபியால் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றாலும், இந்த ஒப்பந்தம் இந்திய அரசின் முறையான உறுதிப்பாட்டையே பிரதிபலிக்கிறது. எனவே தற்போதைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான நிர்வாகம் இந்த ஒப்பந்தத்தை புறக்கணிக்கும் என்று தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக் கருதினால், அது ஒரு பாரதூரமான வரலாற்று தவறாகவே அமையும்.

# மக்கள் குரல் அமைப்பின் பொதுச்சபை கூட்டம்

(சியாஜ்)

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் மாத்தறை, காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கான பிரதிநிதிகளின் பொதுச்சபை குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலியில் பெருந்தோட்டத்துறைமக்கள் குரல்அமைப்பின்நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்டனி ஜேசுதாஸன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் திட்ட பணிப்பாளர் லவினா ஹசந்தினி தேசிய திட்ட இணைப்பாளர் எப். ராஜன், கள முகாமையாளர் அன்ரன் வனத்தையா மற்றும்மாவட்ட இணைப்பாளர்களான ஏ.ஜெஸ்மன் , கே.யோகசுஜி ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தை வழிநடத்தினர்.

நிகழ்வில் பலதுறைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு மலையகசமூகங்கள் எதிர்நோக்கும் காணி, வீடு மற்றும் கல்வி உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதுடன் அமைப்பின் எதிர்காலத்திற்கான செயற்பாடுகளைஇனங்கண்டு மலையக மக்களின் குரல்களுக்கு செவிசாய்ப்பது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதுடன் பொதுச் சபைக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

# வீடுகட்ட வைக்கப்பட்டிருந்த சிமெந்து மூடைகள் திருட்டு

## காத்தான்குடியில் சம்பவம்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கடற்கரை வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருக்கும் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீமெந்து மூடைகளை சந்தேக நபர்கள் திருடி தப்பிசென்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தில்இடம்பெற்றுள்ளதாககாத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு மேலும் தெரவித்துள்ளது.

இந்தத் திருட்டு சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது -

குறித்த வீட்டின் கட்டடப் பணிகள் நிறைவு பெற்ற நிலையில் வீட்டை பூட்டிவிட்டு வீட்டின் உரிமையாளர்கள் வெளியில் சென்றுள்ளனர்.

அடுத்த நாள் பணிகளுக்காக வந்து பார்த்தபோது வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே இருந்த 13 சீமெந்து மூடைகள் திருடப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு வீட்டின்உரிமையாளர்கள்தெரிவித்ததையடுத்து பொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டனர்.

இதனை அடுத்து பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போது சீமெந்து மூடைகளை திருடிய நபர் தனது வீட்டின் ஒரு பகுதி சீமெந்து மூடைகளை மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸார் 13 சீமெந்து மூடைகளையும் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருவதுடன் மேலதிக விசாரணைகளையும் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமூக வலுவூட்டல் வேலைத்திட்ட கருத்தரங்கு மருதமுனையில்

(பாறுக் ஷிஹான்)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் 2025- 2027 தொடர்பான கருத்தரங்கு நேற்று (புதன்கிழமை) மருதமுனை கலாசார மண்டபத்தில் ஆரம்பமானது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு சமூகவலுவூட்டல் அமைச்சு ஏற்பாட்டில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு கல்முனை பிரதேச செயலகசமுர்த்திதலைமைபீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ. ஆர்.எம். சாலிஹ்தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது கல்முனை பதில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம்.எம். அன்சார் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு குறித்த கருத்தரங்கு தொடர்பிலான சிறப்புரை ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தொடர்ந்து குறித்த கருத்தரங்கில் வளவாளராக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளராக எம்.எம் நௌசாத் கலந்து கொண்டு பல்வேறு விளக்கங்களை வழங்கி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக வலுவூட்டல் எனும் தொனிப்பொருளில் இக்கருத்தரங்கு மேற்கொள்ளப் படுவதுடன் மக்களின் வறுமையை ஒழிக்க சகல உத்தியோகத்தர்களும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்ரஞ்சன்போதைப்பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் றாசிக் நபாயிஸ் சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ். சனூபா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். பாத்திமாசிப்றாசமுர்த்திவங்கியாளர்கள் உட்பட சமுர்த்தி அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் உட்பட பிரதேசசெயலக 52 வகையான உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்ளுக்கு தனியான சேவைப் பிராமணக் குறிப்பு அறிமுகம்

(அஷ்ரப்கான்)

நாடளாவிய ரீதியில் கடமையாற்றும் சுமார் 15000 இற்கும் மேற்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிப்பதற்கு பொது நிர்வாக அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும்,பொது நிர்வாக உள்நாட்டு அலுவலக அமைச்சின் செயலாளர் எஸ்.அலோக்க பண்டாரவுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை பொது நிர்வாக அமைச்சில் இடம் பெற்ற சந்திப்பையடுத்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிப்பது சம்பந்தமாக இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் அது விடயமாக உடனடி நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.


மேலும் இது விடயமாக கடந்த வாரம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்னவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு நேரடியாக சந்தித்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிராமணக் குறிப்பு உருவாக்குவது பற்றி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொது நிர்வாக,உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருடனான



சந்திப்பையடுத்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கென தனியான சேவைப் பிராமணக் குறிப்பு சம்பந்தமான நோக்கங்கள், அதன் முக்கியத்துவங்கள் பற்றி தொழிற்சங்க பிரதிநிதிகளால் ஊடக சந்திப்பொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது விடயமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்து அவர்களை தெளிவுபடுத்த எதிர்வரும் வாரங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கபீர் கலீல் தெரிவித்திருந்தார்.




# யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் 2ஆவது சர்வதேசச் சட்ட மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையானது இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடானது மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு மாநாட்டின் தொனிப்பொருளை சார்ந்ததான பல்வேறு விடயப்பரப்புக்கள் பற்றி உரையாடவுள்ளனர்.

மாநாட்டின் ஓரங்கமாக மாற்றுப் பிணக்குத் தீர்வு முறைகள் பற்றிய குறிப்பாக மத்தியஸ்தம் தொடர்பான சிறப்பு அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது தை மாதம் 24 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணி முதல் 6.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்தியாவைச் சேரந்த நிபுணர்கள் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றி பயன்பெற்றுக்கொள்ளுமாறு மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# அக்கரைப்பற்று மாநகரக் களப்பணியாளர்களுக்கு எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு

(செயிட் ஆஷிப்)

நாடளாவிய ரீதியில் பரவி வருகின்ற எலிக்காய்ச்சல் தொடர்பாக அக்கரைப்பற்று மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்களை தெளிவூட்டுவதற்காக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (புதன்கிழமை) அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது.

இதன்போது எலிக்காய்ச்சல் பரவும் வழிமுறைகள் மற்றும் அதற்கான சூழல்கள் பற்றியும் எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார ஒழுங்கு முறைகள் தொடர்பாகவும் விவரிக்கப்பட்டு, அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்களுக்கு எலிக்காய்ச்சலுக்கான தடுப்பு மாத்திரையும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். முனவ்வர், அக்கரைப்பற்று மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி சமீனா ஹம்தூன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம். பௌமி, வேலைகள் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.சலீத் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.



# சுண்ணக்கற்களுடன் பிடிக்கப்பட்ட பாரவூர்தி நீதிமன்றால் விடுவிப்பு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் சுண்ணக்கற்களுடன் கைப்பற்றப்பட்ட கனரக வாகனங்களை சுண்ணக்கற்களுடன் சாவகச்சேரி நீதிமன்று பிணை முறையில் விடுவித்துள்ளது.

தென்மராட்சி பகுதிகளில் சுண்ணக்கற்கள் அகழப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை சுண்ணக்கற்களுடன் பயணித்த கனரக வாகனங்களை நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார்.

அதனை தொடர்ந்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் , குறித்த வழக்கின் மீதான விசாரணைகள் செவ்வாய்க்கிழமை மன்றில் நடைபெற்றன.

அதன் போது , கனரக வாகனத்தின் உரிமையாளர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, பாரவூர்தியில் சட்டவிரோத சுண்ணக்கல் கடத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

கனியவளச் சட்டத்தின் கீழ் புவிச்சரிதவியல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட முறையான அனுமதிப்பத்திரத்துக்கு அமைய சுண்ணக்கற்களை கொண்டு சென்றதாகவும், தனியார் நிறுவனம் ஒன்றால் அகழப்பட்ட சுண்ணக்கற்களை சிறிய கற்களாக உடைத்து, அவற்றை காவுகை செய்வதற்கு பிறிதொரு அனுமதிப் பத்திரங்களைப் பெறவேண்டிய அவசியம் சட்டத்தில் இல்லை என்றும் தனது சமர்ப்பணத்தில் தெரிவித்தார்.

அத்துடன், இதுபோன்ற வழக்கில், கெப்பிட்டிக்கொலாவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் சட்டத்தரணி நீதிமன்றில் சுட்டிக்காட்டியதுடன் ,முறையாக அனுமதிப் பத்திரம் பெற்று கல்லுடைக்கப்பட்ட இடத்தில் இருந்து சுண்ணக்கல் கொள்வனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் மன்றில் சமர்ப்பித்தார்.

அதனை தொடர்ந்து 5 லட்சம் ரூபா பிணையில் பாரவூர்தியையும் அதில் இருந்த சுண்ணக்கற்களையும் விடுவித்த மன்று, பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய உடைக்கப்பட்ட சுண்ணக் கற்களை பகுப்பாய்வுக்காக அனுப்பவும் மன்று உத்தரவிட்டது.



# திருமலையில் பயன்படுத்தப்படாமல் உள்ள உப ஒலிபரப்பு நிலையம் குறித்து கரிசனை

(ஹலால்தீன் )

திருகோணமலையில் பயன்படுத்தப்படாமல் உள்ள உப ஒலிபரப்பு நிலையம் தொடர்பாக நடைபெற்ற திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் -

கும்புறுபிட்டியில் அமைந்துள்ள உப ஒலிபரப்பு நிலையம் முன்னர் ஜேர்மன் வானொலிக்கு சொந்தமாக இருந்தது. தற்போது அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உப நிலையமாக செயற்படுகின்றது.

தற்போது இந்த வானொலி உப ஒலிபரப்பு நிலையத்தினூடாக உள்ளூர் நிகழ்ச்சிகள் எதுவும் ஒலிபரப்பப் படுவதில்லை. வெளிநாட்டு ஒலிபரப்பு ஒன்றுக்காக மட்டும் இந்த நிலையம் பயன்படுத்தப்படுகின்றது. அதுவும் மாலைவேளையில் மட்டும் இந்த ஒலிபரப்பு இடம்பெறுகின்றது. இதற்காக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் வாடகை பெறப்படுகின்றது. ஏனைய நேரங்களில் இந்த நிலையம் எவ்வித செயற்பாடும் இன்றி இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் உள்ள பெறுமதி மிக்க வளம் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது கவலைக்குரியது.

எனவே, இந்த ஒலிபரப்பு நிலையம் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இப்பகுதி கலை பண்பாட்டு நிகழ்வுகளை ஒலிபரப்ப முக்கியத்துவம் கொடுக்கப்படலாம். உள்ளூர் செய்திகள் ஒலிபரப்ப வாய்ப்புகள் வழங்கப்படலாம். அறிவு சார்ந்த நிகழ்வுகள், மாணவர் நிகழ்வுகள் எனப் பல்வேறு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படலாம். இதன் மூலம் மக்கள் மத்தியில் இந்த ஒலிபரப்பு நிலையம் பிரபலமடைந்து விளம்பரங்கள் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். குறிப்பிட்டளவு வேலைவாய்ப்பையும் உருவாக்கலாம்.



எனவே, இப்பகுதி முக்கியஸ்தர்களையும் உள்ளடக்கிய குழு ஒன்றை நியமித்து பரிந்துரைகளைப் பெற்று இதனை அபிவிருத்தி செய்ய வேண்டும். இது தொடர்பான கோரிக்கையை நமது இந்த அபிவிருத்திக்குழு ஊடகத்துறை அமைச்சருக்கு முன் வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## 'ஐஸ்' உடன் இரும்பு வியாபாரி கைது

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ 9 வீதியில் இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கடை உரிமையாளர் 30 கிராம் ஐஸ் போதை போதைப் பொருளுடன் கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவால் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான வியாபார நிலையத்தில் கொரோனா காலப்பகுதியில் பரந்தன் பூநகரிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள இரும்பு பாலம் ஒன்றில் பாலத்தின் இரும்புகளை கழட்டி வியாபாரம் மேற்கொண்ட இந்த சந்தேகத்தில் கிளிநொச்சி பொலீஸார் விசாரணைகள் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்க விடயம்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலீஸார் மற்றும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

113

## 809 வழித்தட பேருந்து ஜனவரி 15 முதல் மூளாயிலிருந்து சேவையில் ஈடுபடாது

### கிளிநொச்சி சாலை அறிவிப்பு

கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபை சாலைக்கு சொந்தமான 809 வழித்தட பஸ் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மூளாயிலிருந்து சேவையில் ஈடுபடாது என இலங்கை போக்குவரத்துச்சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் சிவபாதசுந்தரம் ஜீவானந்தன் தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் -

மூளாயிலிருந்து அதிகாலை 5.30மணிக்கு மருதனார் மடம் உரும்பிராய்,கோப்பாய்கைதடி, சாவகச்சேரி ,தனங்கிழப்பு, பூநகரி முட்கொம்பன், பரந்தன் கிளிநொச்சி வரை சேவையில் ஈடுபட்ட பஸ்ஸானது எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து தனது சேவையை ஆரம்பித்து. காலை 6.00மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு கைதடி,சாவகச்சேரி தனங்கிழப்பு ,பூநகரி முட்கொம்பன்,அக்கராயன் ,முருகண்டி ஊடாக கிளிநொச்சி பஸ் நிலையத்தை அடையவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மீண்டும் 12.40மணிக்கு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு குறித்த பகுதியூடாக யாழ்ப்பாணத்தை சென்றடையவுள்ளதாக தெரிவித்தார்.

113

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

## பிரதான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரிசி மாபியாக்களை இல்லாதொழிக்கும் திட்டங்களைக்கூட முன்வைக்கவில்லை.

உலக உணவு பாதுகாப்புத் திட்டத்தின் அறிக்கைக்கு அமைய இலங்கையின் உணவுப் பாதுகாப்பு கடந்த ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 7 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. பெருந்தோட்ட மக்கள் தமது மாத வருமானத்தில் 75 சதவீதத்தை உணவு பொருட்களுக்காகவே செலவழிக்கிறார்கள். ஆகவே அரிசிவிலையை குறைத்தால் மந்த போசணை வீதமும் வாழ்க்கைச் செலவும் குறைவடையும்.

பிரதான அரிசி உற்பத்தியாளர்கள், விநியோகஸ்த்தர்கள் மற்றும் வங்கிக் கட்டமைப்பின் முக்கிய தரப்பினர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து அரிசி மாபியா செயற்படுகிறது. பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் நாளொன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் இலாபமடைகிறார்கள். இந்த இலாபத்தின் குறைந்தப்பட்சப் பயன்கூட விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் கிடைப்பதில்லை.

அரிசிமாபியாக்களை இல்லாதொழிப்பதை மறந்து விட்டு வாகனங்களின் உதிரி பாகங்களை அகற்றுவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

வீதியில் உள்ள பெட்டிக்கடைகள் அகற்றப்படுகிறது. 'தூயஸ்ரீலங்கா' திட்டம் என்று குறிப்பிட்டுக்கொண்டு பெரும் மோசடிகளும், குற்றங்களும் மறைக்கப்படுகின்றன. முறைமை மாற்றத்தில் மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை என்றார்.

## 3 லட்சம் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல் விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் 3 இலட்சம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம் என கமத்தொழில் மற்றும் கால்நடை அபிவிருத்தி பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யும்போது வருடமுழுவதற்கும் உரியவாறாக அமையும் வகையில் நெல்லுக்கு உத்தரவாத விலை பேணப்படாத காரணத்தால் விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வர்த்தகர்கள் விலையை தீர்மானித்துக்கொள்ளும் நிலை காணப்படுகிறது என்றார் அமைச்சர்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹணபண்டார எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## சட்டமா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகால ஆட்சியில் இருந்த அனைத்து ஆளும்தரப்புகளும் பொறுப்புக்கூறவேண்டும் என்று ஆளும்தரப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். ஜேவிபி நேரடியாகவும், மறைமுகமாகவும் அனைத்து ஆட்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

அனைத்து நெருக்கடிகளுக்கும் கடந்த ஆளும்தரப்புக் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். தற்போது குழந்தை பிறப்பு விகிதம் குறைவடைந்துள்ளது. அதற்கும் கடந்த ஆளும்தரப்பே பொறுப்புக் கூறவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை ஆரம்பத்தில் எதிர்த்தார்கள் இன்று எட்கா ஒப்பந்தம் வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகளின் உண்மை தன்மையை மக்களுக்கு நாங்கள் குறிப்பிட்டோம். ஆனால் தேசிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துக்க எதிரான நிலைப்பாட்டையே மக்கள் மத்தியில் முன்னெடுத்தது. ஆனால் ஐ.எம்.எப் சரணம் கச்சாமி என்று இப்போது துதி பாடுகிறது.

ஜனாதிபதிக்கும், சட்டமா அதிபருக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றுள்ளது. பிரதான வழக்குகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஒருசில வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப் பெற்றுள்ளது. பல்வேறு நெருக்கடிகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் முகங்கொடுத்துள்ளது.

வழக்குகளை துரிதப்படுத்துவது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்குவதாயின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனம் கேள்விக்குள்ளாக்கப்படும். இவ்வாறான செயற்பாடுகளினால் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பின் எதிர்காலம் என்னவாகும் என்கிற சந்தேகம் எழுகிறது.

சமூக கட்டமைப்பில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு எடுத்த தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ளன. ஆளும்தரப்பின் குறைப்பாடுகளை சுட்டிக்காட்டும் போது அதனை ஏற்றுக்கொண்டு தவறை திருத்திக் கொள்ளும் மனநிலை ஆளும் தரப்பினருக்கு கிடையாது. மாறாக குறைகளை சுட்டிக்காட்டும் நபர் மீது சேறு பூசும் நிலைப்பாட்டிலேயே ஆளும்தரப்பு உள்ளது என்றார்.

## வடக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், புலம்பெயர் தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்வது குறித்து ஆர்வத்துடன் உள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரிடம் தெரியப்படுத்தினர். பதிலளித்த அமைச்சர், வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டை நிலையங்களை அமைப்பதற்காக காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் ஆர்வமுள்ளவர்கள் இலங்கை முதலீட்டு சபையின் ஊடாக தங்கள் செயற்திட்டங்களை முன்வைக்க முடியும் எனவும் பதிலளித்தார்.

அதே போன்று நீண்ட காலமாக புலம்பெயர்ந்து நாட்டுக்கு வர முடியாது இருக்கும் தமிழர்கள் தாங்கள் நாட்டுக்கு வர விரும்புவது தொடர்பான ஆர்வத்தை நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அமைச்சரிடம் தெரியப்படுத்தியிருக்கிறார்.

## யூத ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களிற்கு அனுமதி வழங்கவில்லை, இந்த விடயத்தில் நாங்கள் விரைவில் தலையிடுவோம் எனத் தெரிவித்துள்ள பிரதமர் எனினும் அருகம் குடா விவகாரத்தை தொடர்ந்து நாங்கள் யூதர்களின் வழிபாட்டு தலங்களிற்கு பாதுகாப்பை வழங்கவேண்டிய நிலையில் உள்ளோம், இது சுற்றுலாப் பயணிகள் குறித்த நாடொன்றின் கடப்பாடு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரிசி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பொங்கல் தமிழர்களுக்கு முக்கியமானதாகும். ஆகவே பச்சையரிசி மற்றும் தேங்காய் ஆகியவற்றை குறைந்த விலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சந்திரசேகர் தனது ஆட்சியாளர்களிடம் வலியுறுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சமாதானம் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் தைரியமாக முதலீடு செய்வார்கள். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன. இத்தகைய சமூக விரோத செயற்பாடுகளை முடிவுக்குகொண்டுவந்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம்.

அரிசி, தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எதிர்வரும் வாரம் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடவுள்ளோம். ஆனால் பச்சையரிசி மற்றும் தேங்காய்க்கான தட்டுப்பாடு காணப்படுகிறது. ஒரு கிலோ கிராம் பச்சையரிசியை 280 அல்லது 290 ரூபா என்ற அடிப்படையில் வாங்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அடுத்த வாரம் சீனாவுக்குச் சென்று அங்கு பொங்கல் பண்டிகை கொண்டாடவுள்ளார் என்று குறிப்பிடப்படுகிறது. தைப்பொங்கல் தமிழர்களுக்கு முக்கியமானதாகும். ஆகவே பச்சையரிசி மற்றும் தேங்காய் ஆகியவற்றை குறைந்த விலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சந்திரசேகர் தனது ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தவேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கப்படவேண்டும் என்பதனை பாரதியாரே பாடல் ஒன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு பாலம் அமைக்கப்படவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடும். இலங்கை – இந்தியாவிடையில் 18 கிலோ மீற்றர்தான் இடைவெளி. இதில் பாலம் அமைத்தால் நாம் காரிலேயே இந்தியாவுக்கு போய் வரலாம். அதேபோன்று அங்குள்ளவர்களும் இங்கு வந்து போவார்கள்.

இந்திய சுற்றுலாப் பயணிகளே அதிகளவில் இலங்கை வருகின்றனர். இவ்வாறான நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைத்தால் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யலாம். எனவே இலங்கை இந்தியாவுக்கிடையில் பாலம் அமைப்பது தொடர்பில் இந்த ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும்.

அதேவேளை கிளங்கன் வைத்தியசாலையை ஆளும்தரப்பு அபிவிருத்தி செய்யவேண்டும். ஏற்கனவே இந்தியா இந்த வைத்தியசாலைக்கு உதவியுள்ளது. ஆளும்தரப்பினால் இயலாவிட்டால் இந்தியாவிடம் உதவி கோரினால் அவர்கள் தாராளமாக அபிவிருத்தி செய்து தருவார்கள். ஏனெனில் இந்த வைத்தியசாலையை நம்பியே பல்லாயிரக்கணக்கான மக்கள் உள்ளனர்.

அத்துடன் அரசு தற்போது 'தூய ஸ்ரீலங்கா' என்ற பெயரில் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன்மூலம் நடைபாதை வியாபாரிகள், பஸ், ஓட்டோக்காரர்கள், இவர்களை நம்பியுள்ள வர்த்தகர்கள் பாதிக்கப்படுகினறனர். எனவே இது தொடர்பில் அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்றார்.

## பயிர்ச் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## தூய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டம் ஊடாக மக்களை ஊக்கப்படுத்தி அதன் ஊடாக சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவது பிரதான இலக்காகும். பொருளாதார ரீதியில் மாத்திரம் நாடா வீழ்ச்சியடையவில்லை. சமூக கட்டமைப்பிலும் வீழ்ச்சியடைந்துள்ளோம். மக்கள் மத்தியில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்வதற்காகவே 18 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தற்போது அரச கட்டமைப்பின் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தனியார் தரப்பினரும் தன்னிச்சையான முறையில் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆளும்தரப்பைப் பொறுப்பேற்கும்போது பல சவால்களையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். 'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டத்துக்கு எதிரான கருத்துக்களை குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதற்கு அனைத்துதரப்பினரும் ஒத்துஷ்ழைப்புவழங்க வேண்டும். என்பதை வலியுறுத்துகிறோம்.

எதிர்ப்புக்களுக்காக மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை புறக்கணிக்க முடியாது. ஆகவே 'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம். புதிய சட்டங்களை இயற்றி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை.

மக்களின் எண்ணங்களில் இருந்து மாற்றம் தோற்றம் பெறவேண்டும். 'தூய ஸ்ரீ லங்கா' திட்டம் வெற்றிப் பெற்றவுடன் தற்போது எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் தெளிவுப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

'தூய ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு. ஒரு தரப்பினர் தவறான நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க முயற்சிப்பதால் இது அவசியமாகின்றது. ஆகவே 'தூய ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பில் ஜனவரி 21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் இளைஞர் யுவதிகள் தொழிற் சந்தை

(ஷினாஸ்)

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த தொழில் வழிகாட்டல் சந்தை நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் நெறிப்படுத்தலோடு பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எப். பாஸில் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராம மட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்ட இளைஞர் - யுவதிகள் இதில் கலந்துகொண்டதுடன் இங்கு இளைஞர் - யுவதிகளுக்கு தேவையான தொழில் வழிகாட்டல்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் தொடர்பாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

இதேவேளை இந்த நிகழ்வில் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் தொழில் வழங்குனர்களும் கலந்து கொண்டனர். இளைஞர் யுவதிகளின் தகைமைக்கு ஏற்ப தொழில் வழங்குனர்களால், இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா, மனிதவள வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்காக வருகை தந்த நிறுவனங்களுடைய பிரதிநிதிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# சிறுவர் இல்லங்களுக்கு உதவிகள் வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வீரமுனை சீர்பாத தேவி சிறுவர் இல்லம் மற்றும் அஸ்ஸலாம் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் குறைபாடுகளை அறிந்து அவற்றுக்கு உதவி உதவிகள் வழங்கி வைக்கின்ற நிகழ்வு நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியகா சசம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறுவர் இல்லங்களுக்கு முதற்கட்டமாக மெத்தை மற்றும் நுளம்பு வலை ஆகியவை வழங்கி வைக்கப்பட்டதுடன் இல்லங்களின் குறைபாடுகளை பிரதேச செயலாளர் கேட்டறிந்து கொண்டதுடன் அதனை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதேச செயலாளர் பணிப்புரை வழங்கியிருந்தார்.

மேலும் இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஏ.எம்.ஏ சாபீர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ஏ.ஜே குறைசா அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எம்.ட முஜாஹிடீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2025இல் வெளியிடப்பெற்றது